**தலைப்பு 303 – நெசவுக் கைத்தொழில் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

தலைப்பு 303 – நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2025 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2025 யூன் 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

2024 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில், நிதி நிலைமை, நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல், நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு 1 இல் குறிப்பிடப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படைக்கு இணங்க அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 விடயமொன்றை வலியுறுத்தல் - நிதிக்கூற்றுக்களை தயாரிப்பதற்கான அடிப்படை

இந்த நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் அடிப்படையை விபரிக்கும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்பு 1 தொடர்பில் கவனம் செலுத்துமாறு கோருகின்றேன். நிதிக்கூற்றுக்கள் அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் பாராளுமன்றத்தினதும் தேவைப்பாட்டுக்காக தயாரிக்கப்பட்டுள்ளது. அதனால், இந்த நிதிக்கூற்றுக்கள் வேறு நோக்கங்களுக்கு பொருத்தமற்றதாக இருக்கக்கூடும். எனது அறிக்கை நெசவுக் கைத்தொழில் திணைக்களத்தினதும், பொதுத் திறைசேரியினதும் மற்றும் இலங்கை பாராளுமன்றத்தினதும் பயன்பாட்டினை மாத்திரம் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த விடயம் தொடர்பில் எனது அபிப்பிராயத்தில் எந்த மாற்றமும் ஏற்படாது.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

அரசின் நிதிப்பிரமாணம் 150 மற்றும் 151 மற்றும் 2025 பெப்ரவரி 21 ஆந் திகதி திருத்தப்பட்ட 2024 திசெம்பர் 16 ஆந் திகதிய அரச கணக்குகள் வழிகாட்டி இலக்கம் 06/2024 இன் பிரகாரம் அனைத்து பொருண்மையானவை தொடர்பிலும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று அற்ற நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று தயாரிக்கப்பட்டு பேணிச் செல்லப்படுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதற்கமைய அம்முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக்கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் மீதான தாக்கத்தின் அடிப்படையில் தங்கியிருக்கும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறைசார் பின்னணியுடன் செயற்படுத்தப்பட்டது. என்னால் மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படையொன்றை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று உருவாகும் ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீட்டு செய்தல் என்பவற்றிற்காக சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட்டன. தவறுதலாக காண்பிப்பதன் காரணமாக இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கத்தினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல், தவறாக காண்பித்தல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் போன்ற காரணங்களால் ஆகும்.

- உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாமல் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு

நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பாக தெளிவொன்று பெற்றுக் கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலும் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு தெரியப்படுத்தியுள்ளேன்.

## 2. ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் நேரொத்ததாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பின்வரும் பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 வருமான முகாமைத்தும்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| நெசவுக் கைத்தொழில் திணைக்களத்திற்கு உரிய காணி மற்றும் 04 கட்டங்களை வாடகைக்கு வழங்குவதற்கு உரியதாக 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 11,437,450 வாடகை நிலுவையாகக் காணப்பட்டது. | காணி மற்றும் கட்டடங்களுக்கான வாடகை உடன்படிக்கை முடிவடைந்துள்ளதுடன் நிலுவை வாடகை அறவிடுவதற்காக சட்டமாதிபர் திணைக்களத்தின் ஆலோசனையின் பிரகாரம் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. | நிலுவை வாடகைப் பணத்தை அறவிடுவதற்கு தாமதம் இன்றி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 3.2 செலவின முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 03 மீண்டெழும் செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாடுகளில் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்காக மாத்தியதன் பின்னர் அந்த செலவின விடயங்களில் தேறிய நிதியேற்பாட்டின் அடிப்படையில் | மீண்டெழும் செலவின விடயங்கள் மற்றும் நிதியேற்பாடுகள் சேமிப்பதற்கான காரணம் நிதிக்கூற்றுக்களில் ACA 2 (ii) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளதுடன் திணைக்களத்தின் 2024 ஆம் | நடைமுறை ரீதியான நிலமைகளைக் கவனத்தில் கொண்டு நிதியேற்பாடு பெற வேண்டியிருந்ததுடன் நிதியேற்பாடு முழுமையாகப் பயன்படுத்தப்படல் |

| | | | |
|---|---|---|---|
| | மேலும் சேமிப்பு 27 சதவீதம் முதல் 42 சதவீதம் வரையிலான வீச்சில் காணப்பட்டது. | ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த மீண்டெழும் செலவினங்களில் சேமிப்பு 4 சதவீதம் மாத்திரம் ஆகும். | வேண்டும். |
| (ஆ) | மூலதன செலவின விடயத்தின் கீழ் வருகின்ற மென்பொருள் அபிவிருத்திக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 1,900,000 நிதியேற்பாட்டில் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் ஏனைய செலவின விடயங்களுக்காக ரூபா 450,000 மாற்றப்பட்ட பின்னர் அந்த செலவின விடயத்தின் தேறிய நிதியேற்பாடு ரூபா 1,450,000 சேமிக்கப்பட்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டில் திணைக்களத்தின் மென்பொருள் அபிவிருத்திக்காக ரூபா 1.4 மில்லியன் ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் திணைக்களத்தின் இணையதளத்தை அபிவிருத்தி செய்வதற்கான கேள்வி கோரப்பட்டதுடன் கிடைக்கப் பெற்ற கூறுவிலைகள் தொழில் நுட்ப மதிப்பீட்டுக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்ட போதும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழு அறிக்கை கிடைக்காமையின் காரணமாக மிகுதி நடவடிக்கைகள் எடுப்பதற்கு வசதியீனமாக இருந்தது. | பெறுகைகள் கால அட்டவணையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டை முழுமையாகப் பயன்படுத்துதல் வேண்டும். |
| (இ) | மூலதன செலவின விடயத்தின் கீழ் காணப்படுகின்ற கட்டிடம் மற்றும் நிர்மாணங்களுக்காக ரூபா 27,000,000 நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மேலும் ரூபா 5,000,000 இந்த செலவின விடயத்திற்காக விடுவிக்கப்பட்டிருந்த போதும் 2024 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ரூபா 295,190 செலவிடப்பட்டதன் காரணமாக மொத்த தேறிய நிதியேற்பாட்டில் 68 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. | கட்டுபெத்த வடிவமைப்பு பயிற்சிப் பாடசாலைக் கட்டிடத்தை திருத்துவதற்குரிய மதிப்பீட்டின் பிரகாரம் ரூபா 29,828,000 தொகை 2024 யூலை, ஆகஸ்ட் மாதங்களில் கட்டிடத் திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டு ரூபா 21,800,000 தொகை 2024 திசெம்பர் 31 ஆந் திகதி மீண்டும் இந்த திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது. ஏனைய செயற்திட்டங்களுக்காக ஈடுபடுத்துவதற்கு தேவையான நிதியேற்பாட்டு தேவையான பெறுகை பணிகளுக்காக போதியளவான காலம் காணப்படாது இருந்தமையும் இந்த நிதியேற்பாடு சேமிப்பதற்குக் காணரமாக இருந்தது. | பெறுகைக் கால அட்டவணையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்து ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டை முழுமையாக பயன்படுத்துதல் வேண்டும். |

### 3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி ரூபா | அவதானிப்புக்கள் இணங்காமைகள் | கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 396 | 544,731 | திணைக்களத்தால் 06 மாதங்களுக்கு மேற்பட்ட காலம் கடப்பதற்கு முன் செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படாத 28 காசோலைகள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | செலுத்துவதற்கு சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | 06 மாதங்களுக்கு மேற்பட்ட கொடுப்பனவு களுக்காக சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | 2024 சனவரி 10 ஆந் திகதிய இலக்கம் 01/2024 என்ற தேசிய வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் 2.1 ஆம் பிரிவு | 200,000 | மேலதிக நேரப் படி மற்றும் விடுமுறை தினப் படிகளுக்காக நிதிப்பிரமாணம் 66 இன் கீழ் மாற்றப்பட்டிருந்தது. | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டதன் காரணமாக தற்போது சேவையில் ஈடுபட்டிருக்கின்ற உத்தியோகத்தர்கள் மேலதிக நேர சேவையில் ஈடுபடுத்தி இதற்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டின் அளவு போதியளவில் இல்லாமையினால் நிதிப் பிரமானம் 66 இன் நிதியேற்பாடு மாற்ற வேண்டி ஏற்பட்டிருந்தது. | வரவு செலவுத் திட்ட சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்காத உத்தியோகத்தர்க ளுக்கு எதிராக தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 திட்டமிடல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| மீளாய்வாண்டில் நெசவு பயற்சிப் பாடசாலையில் 14 இற்கு உரிய ஆடை சான்றிதழ் பத்திரப் பாட நெறிக்காக 102 மாணவர்களின் | 2024 ஆம் ஆண்டிற்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள 102 மாணவர்கள் விண்ணப்பம் | பாடநெறிகளுக்காக சேர்க்கப்பட்ட மாணவர்களை நிறுத்தி வைத்துக் கொள்வதற்கு தொழில் |

| | | |
|---|---|---|
| விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் அதில் பாடநெறிகளுக்காக 67 மாணவர்கள் பங்குபற்றியிருந்த போதிலும் பாடநெறியை 42 மாணவர்கள் மாத்திரமே பூரத்தி செய்து இருந்தனர். மட்டக்களப்பு, மாத்தறை, தளாவ மற்றும் கட்டுப்பெத்த பயிற்சி பாடசாலையில் எந்த ஒரு பாடநெறியும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | சமர்ப்பித்து இருந்த போதிலும் பாடநெறியைப் பயிலுவதற்காக 67 மாணவர்கள் மாத்திரமே பங்குபற்றியிருந்தனர். அதாவது இறுதிப் பரீட்சைக்கு தோற்றியிருந்த மாணவர்கள் 42 பேர் மாத்திரம் ஆகும். பாடநெறி இடையிடையே ஏனைய வேலை வாய்ப்புக்களுக்காக செல்லுதல் மற்றும் நெசவுக் கைத்தொழில் ஆலோசனையாளர் பதவிக்காக ஆட்சேர்த்தல் கைவிடப்பட்டமையால் திட்டமிடப்பட்ட பிரகாரம் மாணவர்களின் பங்குபற்றல் குறைவடைந்து இருந்தது. மட்டக்களப்பு, மாத்தறை, தலாவ மற்றும் கட்டுபெத்த என்ற நெசவுப் பயிற்சி பாடசாலைகளுக்காக ஆரம்பத்தில் மாணவர்கள் விண்ணப்பித்து இருந்த போதிலும் பாடநெறிக்கு இடையே மாணவர்கள் பாடநெறியை விட்டுச் சென்றிருந்தனர். | பயிற்ச்சிக்கு அனுப்புதல் போன்ற நடவடிக்கைகளில் ஈடுபடுத்துதல் வேண்டும். |

## 4.2 வருடாந்த செயலாற்றல் அறிக்கை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதி இலக்கம் 2/2020 என்ற அரச நிதி சுற்றறிக்கையின் 10.2 ஆம் பந்தியின் பிரகாரம் அரச நிதி திணைக்களத்தால் விநியோகிக்கப்பட்ட வழிகாட்டி இலக்கம் 14 இல் குறிப்பிடப்பட்ட படிவத்தின் பிரகாரம் வருடாந்த செயலாற்றல் அறிக்கை தயாரிக்க வேண்டியிருந்த போதும் திணைக்களத்தால் அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | போதியளவான பதவியணியினர் காணப்படாமையின் செயலாற்றல் அறிக்கை தயாரித்தல் தாமதம் அடைந்த போதிலும் 2024 ஆம் ஆண்டின் செயலாற்றல் அறிக்கை தயாரித்தலும் தற்போது இறுதிக் கட்டத்தில் காணப்படுகின்றது. | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் பிரகாரம் செயலாற்றல் அறிக்கை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கட்டுபெத்த அலுவலகத்தில் இடம்பெற்ற மேற்கொள்ளப்பட்ட பொருள் மெய்மையாய்வு அறிக்கையில் பெரிய டமி 18 மற்றும் சிறுவர் டமி 02 காணப்படுவதாக அறிக்கையிடப்பட்ட போதிலும் 2024 ஆம் ஆண்டில் தேசிய கைத்தறி நெசவு இயந்திர போட்டி மற்றும் கண்காட்சிக்காக கொள்வனவு செய்யப்பட்ட 30 டமிக்கள் தொடர்பாக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | கட்டுபெத்த அலுவலகத்தில் 2024 ஆம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட 30 டமிக்கள் தொடர்பாக பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. | பொருள் மெய்மையாய்வு நடவடிக்கைகள் கால ரீதியில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | நெசவுப் பயிற்சிப் பாடசாலைகளுக்காக பகிர்ந்தளிப்பதற்கு 2016, 2020 மற்றும் 2022 ஆம் ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் நன்கொடையாகக் கிடைத்த 02 கணனிக் கதிரைகள், 09 அயன் மேசைகள், 25 பிளாஸ்டிக் கதிரைகள், 04 இலாச்சுடனான உள்ள 02 அலுமாரிகள் மற்றும் 02 புத்தக இறாக்கைகள் கணக்காய்வுத் திகதியான 2025 சனவரி 27 ஆம் திகதி வரையும் களஞ்சிய வளவில் விளைவற்றுக் காணப்பட்டது. | கட்டுப்பெத்த அலுவலகத்தில் உள்ள 02 கணனிக் கதிரைகள், 09 அயன் மேசைகள், 25 பிளாஸ்டிக் கதிரைகள், 04 இலாச்சுடனான உள்ள 02 அலுமாரிகள் மற்றும் 02 புத்தக இறாக்கைகள் ஆடைப் பயிற்ச்சிப் பாடசாலை, சுற்றுலா விடுதி மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு நியமிக்கப்பட்டு சேவையில் ஈடுபட்டிருக்கின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | தேவையின் அடிப்படையில் மாத்திரம் பொருடகள் கொள்வனவு செய்து அந்த பொருட்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேுண்டும். |
| (இ) | 2021 ஆம் ஆண்டில் கிடைத்த நன்கொடையாகக் கிடைக்கப் பெற்ற 25 பிளாஸ்டிக் கதிரைகளின் பெறுமதி மதிப்பீடு செய்யப்படடு கணக்கீடு செய்வதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | 2025 ஆம் ஆண்டின் போது மதிப்பீட்டுப் பெறுமதியை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | நன்கொடையாகக் கிடைத்த சொத்துக்களை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | நெசவுக் கதைத்தொழில் திணைக்களம் மற்றும் பயிற்சிப் பாடசாலைகளில் காணப்படுகின்ற அலுவலக உபகரணங்கள், கணனி உபகரணங்கள், தளபாடங்களை உள்ளடக்கிய இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்காக மேற்கொள்ளப்படுகின்ற பொருள் மெய்மையாய்வின் போது பரிந்துரை செய்யப்படுகின்ற அழிவடையச் செய்தல் (D) ஏலமிடல் (S) உரிய காலப் பகுதியில் மேற்கொள்ளாமையினால் அந்த விடயங்களின் பெறுமதி கணக்குகளில் இருந்து அகற்றுவதற்கு முடியாமையனால் நிதியல்லாச் சொத்துக்களின் கீழ் வருகின்ற ஏனைய இயந்திரம் மற்றும் உபகணரங்களின் பெறுமதி ரூபா 24,167,541 பிழையான பெறுமதியை கொண்டிருந்தது. | 2024 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு மேற்கொண்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளதுடன் கடந்த ஆண்டுகளின் பொருள் மெய்மையாய்வின் பரிந்துரை தொடர்பாக கவனத்தில் கொள்ளுமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | பொருள் மெய்மையாய்வுப் பரிந்துரை கால ரீதியில் அமுல்படுத்தி விற்றுத் தீர்க்க வேண்டிய சொத்துக்கள் கணக்குகளில் இருந்து அகற்றப்படல் வேண்டும். |

**4.4 நட்டம் மற்றும் இழப்புக்கள்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| ஆடைப் பயிற்சிப் பாடசாலை ஊடாக நடாத்தப்படுகின்ற பாடநெறிகள் மற்றும் செயற்திட்டத்திற்கு தேவையான நூல் கட்டுபெத்த களஞ்சிய கட்டிடத்தில் களஞ்சியப் படுத்தப்பட்டுள்ளதுடன் அந்த நூல் இருப்புக்களுக்கு இடையே 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2/80 சாம்பல் மற்றும் 2/80 வெள்ளை நூல் முறையே 105.640kg மற்றும் 420.540kg எஞ்சியிருந்தது. 2024 சனவரி 07 இல் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின் போது அந்த (2/80 சாம்பல் மற்றும் 2/80 வெள்ளை) நூல் இருப்புக்களில் முறையே 28.84kg மற்றும் 10.50kg நூல் அளவு பயன்படுத்துவதற்கு முடியாததாக இழப்பீட்டுக்கு உட்பட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. மேலும் இந்த நூல் இருப்பு இழப்பீடு தொடர்பில் களஞ்சிய கட்டத்தில் சுத்தமான நிலமை குறைந்த நிலையில் காணப்பட்டமை மற்றும் முறையான | திணைக்களத்திற்கு உரிய தற்போது காணப்படுகின்ற வளங்களை உச்ச அளவில் பயன்படுத்திய களஞ்சிய கட்டிடத்தை பராமரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் தற்போது இந்த திணைக்களத்தில் ஏனைய பேருகள் காணப்படுகின்ற இறாக்கைகள் அல்லது பலகைகளை பயன்படுத்தி நூல் களஞ்சியப்படுத்தும் முறைமை திட்டத்தை முறையாக மேற்கொள்வதற்கு களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. எறும்புகள் ஊர்வதை தடுப்பதற்காக Pest control முறைமை ஒன்று | இழப்பீட்டைக் குறைக்கும் வகையில் இருப்பை பாதுகாத்துக் கொள்வதற்கு முறையான திட்ட முறைமை ஒன்று அறிமுகப்படுத்தல் வேண்டும். இருப்பு இழப்பீட்டிற்காக பொறுப்பு வாய்ந்த நபர்களை இனங்காண்பதற்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். |

| | | |
|---|---|---|
| திட்டத்தின் பிரகாரம் நூல் இருப்பு களஞ்சியப்படுத்தப்படாமையினால் ஏற்பட்ட எறும்புகளின் பாதிப்பு நேரடியாக தாக்கமளித்து இருந்தது. | களஞ்சியத்தில் களஞ்சிய கட்டிடத்தில் தேவையான இடங்களில் இடுவதற்காக தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |

## 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கொரோனா தொற்ற நோய்க் காலத்தில் நெசவுக் கைத்தொழில் பயிற்சிப் பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக 2021 திசெம்பர் 30 ஆந் திகதி வெப்பநிலையை அளவிடுவதற்காக பயன்படுத்தப்படுகின்ற உபகரணங்கள் (Thermometer) 14 கொள்வனவு செய்யப்பட்டதுடன் அந்த உபகரணங்கள் 07 உம் பயிற்சி பாடசாலைகளுக்கு பகிர்ந்தளிக்காமையின் காரணமாக 2025 ஆம் ஆண்டு வரையிலும் களஞ்சியக் கட்டிடத்தில் விளைவற்றுக் காணப்பட்டது. | கொரோனா தொற்று நோய்க் காலத்தில் கொள்வனவு செய்யப்பட்ட இந்த வெப்பமாணிகள் உரிய ஆடைப் பாடசாலைகளுக்கு விநியோகிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு களஞ்சியப் பொறுப்பு உத்தியோகத்தருக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | உரிய சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு முடியுமான தரப்பினருக்கு வழங்குதல் வேண்டும். |
| (ஆ) | 2024 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பிரதான அலுவலகத்தின் களஞ்சியக் கட்டிடத்தில் 4L சனிடைசர் போத்தல் 07 மற்றும் சிறிய அளவிலான செனிடைசர் போத்தல் 11 மற்றும் வாகனம் கழுவும் கரைசல் 13 போத்தல்கள் காலாவதியாகி இருந்ததாக களஞ்சியப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டதுடன் தேவையினை இனங்காணாமல் மேற்கொள்ளப்பட்ட இவ்வாறான கொள்வனவுகளுக்காக ஏற்பட்ட செலவினம் விளைவற்ற செலவினத்திற்கு | கொரோனா தொற்று நோய் காலத்தில் நெசவு பாடசாலைகளுக்கும் திணைக்களத்திற்கும் நியமிக்கப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு கொள்வனவு செய்யப்பட்ட இந்த பொருட்கள் காலாவதியாகி இருந்தமையால் இந்த ஆண்டில் பொருள் மெய்மையாய்வின் போது அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | தேவையின் அடிப்படையில் சொத்துக்கள் கொள்வனவு செய்ய வேண்டி இருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

உட்பட்டிருந்தது.

## 5. நல்லாளுகை

### 5.1 உள்ளகக் கணக்காய்வு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| உள்ளகக் கணக்காய்வாளர் பதவி ஒன்று அங்கீகரிக்கப்பட்ட போதும் வெற்றிடம் நிரப்பப்படாமையின் காரணமாக உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | உள்ளகக் கணக்காய்வாளர் கணக்காய்வு உத்தியோகத்தர் வழங்கப்படும் வரை அந்தப் பதவியின் பதிற் கடமைக்காக பொருத்தமான உத்தியோகத்தரை வழங்குமாறு கோரப்பட்டிருந்த போதிலும் இது வரை உள்ளகக் கணக்காய்வாளர் பதவி வெற்றிடமாகக் காணப்படுகின்றது. | உள்ளகக் கணக்காய்வை மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

### 5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | கணக்கீட்டு உத்தியோத்தரின் கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|
| 2019 சனவரி 12 ஆந் திகதி இலக்கம் DMA/01-2019 என்ற முகாமைத்துவ கணக்காய்வு சுற்றறிக்கையின் 05 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க 2024 ஆம் ஆண்டிற்காக கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டம் நடாத்தப்பட்டிருக்கவில்லை. | 2025 ஆம் ஆண்டிற்காக திணைக்கள கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டங்களை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | முகாமைத்துவக் கணக்காய்வு சுற்றறிக்கையின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்களை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |